மிருந்தும் பணத்தை உடனடியாக வசூலிக்க அரசு ஏற்பாடு செய்து, அதன் காரணமாக உணவு வகைகள் சரியாக அளிக்கும் முறையில் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப் போல, சிலர் கொடுக்க வேண்டிய பணம் பெரும் தொகையாக இருக்கிறது. அதை எப்படி விட்டார்கள் என்று தெரியவில்லை. கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டியது தான். அவர்கள் ஹவுஸ் சர்ஜன் படித்தாலும், தொகை முழுவதும் அவர்கள் கட்டியதற்குப் பிறகுதான் ஹவுஸ் சர்ஜன் சர்டிபிகேட் கொடுப் போம். முதலில் அவர்கள் ஹாஸ்டலில் இருந்தால்தான், அவர்களுக்கு ஸ்காலர்ஷிப் கிடைக்கும். ஸ்காலர்ஷிப் வரும்போதுதான் பணம் கொடுக் கிற நிலை வருகிறது. டிசம்பர், ஜனவரி மாதங்களில் வரும். சில சமயங்களில் கடைசி ஐந்தாறு மாதங்களுக்குப் பணம் வசூலிக்க முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது. அந்தந்த ஆண்டிற்குரிய பணம் அந்தந்த ஆண்டில் வசூலிக்கப்பட்டிருந்தால், இவ்வளவு வந்திருக்காது. மாண்பு மிகு உறுப்பினர் கூறியது போல, கடுமையான நடவடிக்கை எடுப்பதன் மூலமும் பணம் அதிகமாகச் சேராத வகையிலும் தக்க முயற்சிகளை எடுப்போம்.

திரு. டி. கே. சுப்பையா : மாணவர்கள் விடுதியில் உணவு விகிதா சாரம் அந்தந்த மாதத்திற்கு இவ்வளவு ரூபாய் செலவாகிறது என்று நிர்ணயம் செய்யப்படுகிறது. அந்த வகையில் இருந்தால், உணவுக்கான தொகை பாக்கி இருக்கும்போது, என்ன விகிதாசாரத்தில் நிர்ணயிக்கப் பட்டு எப்படி வசூலிக்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன்: செலவாகிற பணத்தைப் பார்த்து எவ்வளவு மாணவர்கள் சாப்பிடுகிறார்கள் என்று கணக்கிட்டு ஒவ்வொரு மாதமும் அந்த அளவுக்கு ஒவ்வொருவரும் இவ்வளவு கொடுக்க வேண்டுமென்று நிர்ணயம் செய்வார்கள். அப்படிச் செய்ததில் சிலர் இரண்டாயிரம் அளவுக்கு பாக்கி வைத்திருக்கிறார்கள். அதைத் தான் உறுப்பினர் குறிப்பிட்டார்கள். இனிமேல் ஒரு ஆண்டுக்கு மேல் பணம் கட்டாமல் இருக்கும் நிலை இல்லாத வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ள அரசு முயற்சிக்கும்.

திரு. டி. கே. சுப்பையா : ஸ்காலர்ஷிப் வாங்கிய மாணவர்கள் பாக்கி கொடுக்க வேண்டியிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : பாக்கியுள்ளவர்கள் பெரும்பாலும் ஸ்காலர்ஷிப் மாணவர்கள்தான்.

திரு. கே. ராஜாராம் : அப்படியிருந்தால், அவர்களிடமிருந்து பாக்கி இருக்கும்போது, சம்பந்தப்பட்ட ஹாஸ்டல் வார்டன் இந்த ஸ்காலர்ஷிப்பை அவர்களுக்குக் கொடுத்தது தவறு அல்லவா ? அவர் பேரில் அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : எந்த வகையில் அந்தத் தொகை கூடிற்று என்ற தகவல் இல்லை. மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர்கூறியதுபோல, விசாரணையில் ஈடுபட்டு அதிகமான தொகை எப்படி விட்டார்கள் என்று நடவடிக்கை எடுக்க அரசு முயலும்.

Journals published by the State Institute of Education.

***49. Q.—Thiru G. SWAMINATHAN :** Will the Hon. the Minister for Education and Health be pleased to state :—

(a) the names of journals published by the State Institute of Education in 1968–69 ;

[24th January 1970

(*b*) the number of copies printed in each of the journals during that year ;

(*c*) the number of subscribers for each journal during the year 1968–69 ; and

(*d*) whether such publication is self-supporting ?

மாநில கல்வி நிறுவனத்தினல் வெளியிடப்பட்ட வெளியீடுகள்.

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1968–69-ஆம் ஆண்டில் மாநிலக் கல்வி நிறுவனத்தினல் வெளியிடப்பட்ட வெளியீடுகளின் பெயர்கள் யாவை?

(இ) அவ்வாண்டில் ஒவ்வொரு வெளியீட்டின் அச்சடிக்கப்பட்ட படிகளின் எண்ணிக்கை என்ன ?

(உ) 1968–69ம ஆண்டில் ஒவ்வொரு வெளியீட்டிற்கான சந்தாதாரர்கள் எத்தனை பேர் ?

(எ) அத்தகைய வெளியீடு, தன் துணைச் சார்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ) (1) "Madras Education."

(2) தமிழகக் கல்வி.

(இ) பெயர்.

				பிரதிகளின் எண்ணிக்கை.
Madras Education	..	எப்ரல் 1968	.. ..	3,200
		ஜுலை 1968	.. ..	3,500
		அக்டோபர் 1968	..	4,000
		ஜனவரி 1969	.. ..	4,000
தமிழகக் கல்வி	.. ..	மே திங்கள் தவிர, ஒவ்வொரு திங்களும்.		36,000

(உ) "Madras Education" பத்திரிகைக்கு 3,312 சந்தாதாரர்கள் உள்ளனர். மாநிலத்தில் உள்ள அனைத்து தொடக்கப்பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், உயர் நிலைப் பள்ளிகள், பயிற்சிப் பள்ளிகள், பொது நூலகங்கள் ஆகியவற்றிற்கு இலவசமாகவே தமிழகக் கல்வி (தமிழ் வெளியீடு)/ வழங்கப்படுகிறது

(எ) "Madras Education" என்னும் வெளியீடு தன் துணைச் சார்புடையதாகும். "தமிழகக் கல்வி" விலைக்கு விற்கப்படும் வெளியீடு அல்ல.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, தற்சமயம் வெளி வருகின்ற இந்த வெளியீடுகளை உறுப்பினர்களுக்கு அனுப்பினல், அதனல் பயன் ஏற்படும் என்பதை அரசு உணர்ந்து நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, உறுப்பினர்களுக்கும், சில அதிகாரிகளுக்கும் மற்ற துறையினருக்கும் அனுப்பப்படுகிறது. உறுப்பினர்களுக்கு அனுப்பப்படாமல் இருந்தால், அதைப் பற்றி கவனிக்கலாம்.

Leave Rules of Teachers.

*50. Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education and Health be pleased to state :—

(*a*) whether the Government are aware of the fact that for want of leave rules many teachers in the aided High Schools have been granted eave on loss of pay from 1st April 1964 to 1st April 1968 ; and

(*b*) whether there is a proposal to give retrospective effect from 1st April 1964 to G.O. Ms. No. 451, Education , dated 1st April 1968 ?